வெளியிடுபவர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
திகதி 2024.03.26

## நாணயக்கொள்கை மீளாய்வு : இல. 02 – 2024 மார்ச்சு
## இலங்கை மத்திய வங்கி கொள்கை வட்டி வீதங்களை மேலும் குறைக்கின்றது

*இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது 2024 மார்ச்சு 25ஆம் நாளன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில் மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தினையும் முறையே 8.50 சதவீதத்திற்கும் 9.50 சதவீதத்திற்கும் 50 அடிப்படைப் புள்ளிகளால் குறைப்பதற்குத் தீர்மானித்தது. நடுத்தரகாலத்தில் பணவீக்கத்தை 5 சதவீதம் கொண்ட இலக்கிடப்பட்டமட்டத்தில் பேணுகின்ற அதேவேளை பொருளாதாரம் அதன் உள்ளார்ந்த ஆற்றலை அடைவதை இயலச்செய்வதற்கு தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்பட்ட உள்நாட்டு மற்றும் உலகளாவிய பொருளாதார அபிவிருத்திகள் பற்றிய விரிவான மதிப்பீடொன்றினைத் தொடர்ந்து சபை இத்தீர்மானத்தை மேற்கொண்டது. இத்தீர்மானத்தை மேற்கொள்கையில் சபையானது ஏனையவற்றிற்கு மத்தியில், குறைவடைந்த கூட்டுக் கேள்வி நிலைமைகள், வரிக்கட்டமைப்பிற்கான அண்மைய மாற்றங்களின் பணவீக்கம் மீதான எதிர்பார்க்கப்பட்டதைக்காட்டிலும் குறைவான தாக்கம், மின்சாரக் கட்டணங்களுக்கான அண்மைய சரிப்படுத்தல் காரணமாக சாதகமான அண்மைக்கால பணவீக்க இயக்கவாற்றல்கள், மிகவும் நிலைநிறுத்தப்பட்ட எதிர்பார்க்கைகள், மிதமிஞ்சிய வெளிநாட்டுத் துறை அழுத்தங்கள் இல்லாமை, சந்தை வட்டி வீதங்களில் கீழ்நோக்கிய போக்கினைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கான தேவை என்பன பற்றி சபை கருத்திற்கொண்டது. பொருளாதார நடவடிக்கையானது நீடிக்கப்பட்ட காலப்பகுதிக்கு சாரசரிக்கு கீழ் காணப்படுமென எறிவுசெய்யப்பட்டுள்ளமையினால், அண்மைய காலத்தில் பணவீக்கத்திற்கான சாத்தியமான இடர்நேர்வுகள் நடுத்தரகால பணவீக்கத் தோற்றப்பாட்டில் முக்கிய மாற்றத்தினைக் கொண்டிருக்காது என சபை அவதானத்தில் கொண்டது. நாணயச் சபையானது நாணயத் தளர்த்தல் வழிமுறைகளின் விரிவான மற்றும் முழுமையான ஊடுகடத்தலுக்கான, குறிப்பாக நிதியியல் நிறுவனங்கள் மூலமான கடன்வழங்கல் வீதங்களுக்கும் இதனூடாக வரவிருக்கும் காலப்பகுதியில் சந்தை வட்டி வீதங்கள் இயல்புநிலைக்குத் திரும்புவதைத் துரிதப்படுத்துவதற்குமான தேவையினை வலியுறுத்தியது.*


**பணவீக்கமானது வரவிருக்கும் காலப்பகுதியில் இலக்கிடப்பட்ட மட்டத்துடன் ஒருங்கிணைந்து செல்லுமென எதிர்பார்க்கப்படுகின்றது**

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் (கொ.நு.வி, 2021=100) ஆண்டிற்காண்டு மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கமானது உணவல்லாப் பணவீக்கத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் பிரதானமாகத் தூண்டப்பட்டு 2024 சனவரியின் 6.4 சதவீதத்திலிருந்து 2024 பெப்புருவரியில் 5.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. உணவுப் பணவீக்கமானது 2024 பெப்புருவரியில் ஆண்டிற்காண்டு அடிப்படையில் அதிகரித்தபோதிலும் உணவு விலைகளில் தளர்வடைதலைப் பிரதிபலித்து மாதத்திற்கு மாத பணச்சுருக்கம் பதிவாகியது. பொருளாதாரத்தின் அடிப்படைக் கேள்வி அழுத்தங்களைப் பிரதிபலிக்கின்ற மையப் பணவீக்கம் 2024 பெப்புருவரியில் 2.8 சதவீதமாகக் குறைவடைந்து காணப்பட்டது. 2024 சனவரியில் செயலுறுத்தப்பட்ட பெறுமதிசேர்க்கப்பட்ட வரித்திருத்தங்களின் பணவீக்கம் மீதான தாக்கம் ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்டவாறு பாரியளவாக இருக்காது என 2024இன் முதல் இரண்டு மாதங்களுக்கான

அடையப்பட்ட பணவீக்கம் எடுத்துக்காட்டுகின்றது. மேலும், முன்னைய எறிவுகளுடன் ஒப்பிடுகையில், பெறுமதிசேர் வரித் திருத்தங்கள் மூலம் தூண்டப்படும் பணவீக்கத்தின் தற்காலிக சிறிய உயர்வின் தாக்கங்கள், மின்சாரக் கட்டணங்களுக்கான அண்மைய கீழ்நோக்கிய திருத்தங்கள் மற்றும் உணவு விலைகளில் மிதமடைதல் என்பன மூலம் பகுதியளவில் எதிரீடு செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுவதனால் வரவிருக்கும் மாதங்களில் முதன்மைப் பணவீக்கம் மிதமடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. எவ்வாறாயினும், பணவீக்கமானது இறுதியாக, வரவிருக்கும் காலப்பகுதியில் இலக்கிடப்பட்ட மட்டத்துடன் ஒருங்கிணைந்திருக்குமென எதிர்பார்க்கப்படுவதுடன் பொருத்தமான கொள்கை வழிமுறைகளினால் துணையளிக்கப்பட்டு நடுத்தரகாலத்தில் இலக்கை அண்மித்துக் காணப்படும்.

**முதன்மைப் பணவீக்க எறிவுகள்**

**கொ.நு.வி.சுட்டெண்* (காலாண்டு சராசரி, ஆண்டிற்காண்டு, சதவீதம்)**




*மூலம்: மத்திய வங்கியின் அலுவலர் எறிவுகள்*

*குறிப்பு: வீச்சு வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள 2022 கா4 வரையான அடையப்பட்ட தரவுகள் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2013=100, பருவகால ரீதியில் சீராக்கப்பட்ட) அடிப்படையிலமைந்துள்ள வேளையில் இக்காலப்பகுதிக்குப் பின்னரான தரவுகள் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2021=100, பருவகால ரீதியில் சீராக்கப்பட்ட) அடிப்படையிலமைந்துள்ளன. எறிவுகள் 2024 மாச்சு மாத எதிர்வுகூறல் சுற்றில் கிடைப்பனவாகவுள்ள சகல தரவுகளையும் அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளன

வீச்சு வரைபடமானது படிப்படியாக மங்கலடைகின்ற நிறங்களுடைய நம்பிக்கை இடைவெளிகளைப் பயன்படுத்தி அடிப்படை எறிவுப்பாதையைச் சூழ்ந்துள்ள நிச்சயமற்றதன்மையத் தெளிவுபடுத்துகின்றது. வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள நம்பிக்கை இடைவெளிகள் நடுத்தர காலத்தில் பணவீக்கம் தளம்பலடையக்கூடிய பெறுமதிகளுக்குள்ளான வீச்சுகளை எடுத்துக்காட்டுகின்றன. உதாரணமாக, தடிப்பான பச்சை நிறப்படுத்தப்பட்ட பகுதியானது 50 சதவீத நம்பிக்கை இடைவெளிகளை எடுத்துக்காட்டி உண்மையான பணவீக்க விளைவு இவ்விடைவெளிகளினுள் அமையப்பெறும் என்ற 50 சதவீத நிகழ்தகவினை உணர்த்துகின்றது. நம்பிக்கை இடைவெளி நீண்ட காலத்தில் பணவீக்கத்தின் எதிர்வுகூறலின் அதிகரிக்கின்ற நிச்சயமின்மையினைக் காட்டுகின்றது.

**குறிப்பு: எதிர்வுகூறல் என்பது வாக்குறுதியோ அன்றில் கடப்பாடோ அல்ல.**

2024 மாச்சு மாத எதிர்வுகூறல் சுற்றில் கிடைக்கப்பெறுகின்ற தரவுகள், மேற்கொள்ளப்பட்ட ஊகங்கள் மற்றும் தீர்மானங்கள் என்பவற்றை எறிவுகள் பிரதிபலிக்கின்றன. உலகளாவிய வலு மற்றும் உணவு விலைகள், இலங்கையின் முக்கிய வர்த்தகப் பங்காளர்களின் படிப்படியான வளர்ச்சி மீட்சி, படுகடன் மறுசீரமைப்புச் சூழ்நிலையின் கீழான பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி எறிவுகளுடன் இசைந்து செல்லும் விதமாக எதிர்பார்க்கப்படுகின்ற உள்நாட்டு இறைப் பாதை மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் நாணயக்கொள்கை நிலையினால் குறித்துக்காட்டப்படுகின்ற உலகளாவிய நிதியியல் நிலைப்பாடுகள் போன்ற எதிர்வுகூறல்களின் மீதான நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும். மேலும், எறிவுகள் மாதிரியுருவிற்கு ஒத்திசைவான வட்டி வீத பாதை மற்றும் தோற்றம் பெறுகின்ற பேரண்டப்பொருளாதார பதிலிறுப்புக்கள் என்பன மீதான நிபந்தனைகளுக்குட்பட்டவையாகும். இவ்வூகங்களில் காணப்படும் ஏதேனும் குறிப்பிடத்தக்க மாற்றம் எறிவுசெய்யப்பட்ட பாதையிலிருந்து அடையப்பட்ட பணவீக்கப் பாதை விலகுவதற்கு வழிவகுக்கக்கூடும்.

நிலவுகின்ற உள்நாட்டு மற்றும் உலகளாவிய பொருளாதார நிச்சயமின்மைகள், வானிலை நிச்சயமற்றதன்மைகள் மற்றும் புவிசார் அரசியல் பதற்றங்கள் என்பவற்றைக் கருத்திற் கொள்கையில், தற்போதைய எறிவுடன் இணையப்பெற்ற இடர்நேர்வுகள் சாதாரண காலங்களைக் காட்டிலும் ஒப்பீட்டளவில் உயர்வானதாகும். எறிவுகளில் வெளிப்படையாகவோ அல்லது உள்ளார்ந்தமாகவோ ஏற்கனவே எறிவுகளில் உட்புறப்படுத்தப்பட்ட மட்டங்களிலிருந்து விலகுகின்ற பல்வேறு காரணிகளின் சாத்தியத்தன்மை மற்றும் எதிர்பார்க்கப்படாத ஏதேனும் அபிவிருத்திகள் என்பன காரணமாக இவ்விடர்நேர்வுகள் தோற்றம்பெறுகின்றன. குறிப்பாக, நிச்சயமற்றதன்மைக்கு மத்தியில் உலகளாவிய உணவு மற்றும் வலு விலைகள் மீதான சாத்தியமான மேல்நோக்கிய அழுத்தங்களின் தாக்கம்; வேளாண்மை உற்பத்தியில் பாதகமான வானிலையின் தாக்கம் மற்றும் அதன்மூலமான உணவு விலையில் தாக்கம்; அடுத்த திருத்தச் சுற்றில் மின்சார தீர்வைக்கான சாத்தியமான மேல்நோக்கிய திருத்தம்; உயர்ந்தளவான கூலிகளின் சாத்தியமான தேறல் போன்ற காரணிகளிலிருந்து தோற்றம்பெறுகின்ற பணவீக்க எறிவுகளிற்கான மேல்நோக்கிய இடர்நேர்வுகள் காணப்படுகின்றன. அதேவேளை, பணவீக்க எறிவுகளுக்கான கீழ்நோக்கிய இடர்நேர்வுகள், நிரம்பல் நிலைமைகளின் வேகமான மீட்சியையும், மற்றும் பொதுமக்களின் குறைவடைந்த கொள்வனவுச் சக்தியின் தொடர்ச்சியான தாக்கத்தையும் உள்ளடக்குகின்றது.

பணவீக்கத் தோற்றப்பாட்டிற்கான ஏதேனும் மாற்றங்கள் பற்றி கிரமமானதோர் அடிப்படையில் பொது மக்களுக்குத் தொடர்பூட்டி தகவலறிந்த தீர்மானங்களை எடுப்பதற்கு அவர்களை இயலச் செய்வதற்கு மத்திய வங்கி அர்ப்பணிப்புடனுள்ளது.

**உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கையின் மீட்சி தொடர்ந்தும் இடம்பெறுமென எதிர்பார்க்கப்படுகின்றது**

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளின் பிரகாரம் பொருளாதாரமானது 2023இன் மூன்றாம் காலாண்டில் பதிவாகிய 1.6 சதவீதம் (ஆண்டிற்கு ஆண்டு) கொண்ட மிதமான வளர்ச்சியினைத் தொடர்ந்து, 2023இன் நான்காவது காலாண்டில் ஆண்டிற்கு ஆண்டு 4.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளதாக எதிர்பார்க்கப்படுகின்றது. ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் பதிவாகிய சாதகமான வளர்ச்சிப் பெறுபேறுகள், பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த சுருக்கத்தினை 2022இல் பதிவாகிய 7.3 சதவீதம் (திருத்தப்பட்டது) கொண்ட சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2023இல் 2.3 சதவீதமாக மட்டுப்படுத்துவதற்கு துணையளித்தன. வரவிருக்கும் காலாண்டுகளிலும் இவ்வளர்ச்சி உத்வேகம் தொடர்ந்தும் இடம்பெறுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**வரவிருக்கும் காலப்பகுதியில் சந்தை வட்டி வீதங்களில் மேலும் வீழ்ச்சி தேவைப்படுகின்றது.**

இதுவரையிலும் நடைமுறைப்படுத்தப்பட்ட நாணயக் கொள்கை தளர்த்தல் வழிமுறைகளுக்கும் உள்நாட்டு படுகடன் மேம்படுத்துகை நடைமுறைப்படுத்தலுக்குப் பின்னர் அரசாங்கப் பிணையங்கள் மீதான விளைவுகளுடன் இணைக்கப்பட்ட இடர்நேர்வு மிகையின் குறைவடைதலுக்கும் பதலிறுத்தி, ஒட்டுமொத்த சந்தை வட்டி வீதக் கட்டமைப்பு கீழ்நோக்கி சரிசெய்யப்பட்டுள்ளது. எனினும், சந்தை வட்டி வீதங்களின் குறிப்பாக கடன் வழங்கல் வீதங்களில், குறைப்பின் வேகம் அண்மைய மாதங்களில் மெதுவடைந்து, ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் குறிப்பிடத்தக்க சீராக்கத்தினைப் பதிவுசெய்த அரசாங்கப் பிணையங்கள் மீதான விளைவுகள் சில திரும்பல்களைக் காட்டியுள்ளன. அதேவேளை, ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபாவின் உயர்வடைதலிலிருந்து தோன்றுகின்ற பெறுமதித் தாக்கங்களின் பகுதியளவான காரணமாகவும் சாத்தியமான பண்டிகைப் பருவகாலத்திற்குப் பிந்திய தீர்ப்பனவு காரணமாகவும் 2023 யூன் தொடக்கம் விரிவடைந்த கட்டமொன்றாகவிருந்த உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மூலம் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடனானது 2024 சனவரியில் நிலுவையாகவிருந்த கொடுகடனில் சுருக்கத்தினை அவதானித்தது. எவ்வாறாயினும், 2024 பெப்புருவரிக்கான பூர்வாங்கத் தரவுகள் மூலம் பிரதிபலிக்கப்பட்டவாறு கொடுகடன் வளர்ச்சி ஓரளவு மீளத்தொடங்கியுள்ளது. நிலவுகின்ற தளர்வான நாணயக் கொள்கை நிலையானது இன்று மேற்கொள்ளப்பட்ட கொள்கை வட்டி வீதங்களில் குறைப்புடன் ஒன்றிணைந்து சந்தை கடன்வழங்கல் வீதங்களில் மேலும் குறைவொன்றிற்கு தூண்டுதலளித்து, வரவிருக்கும் காலப்பகுதியில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மூலம் தனியார் துறைக்கான கொடுகடன் விரிவடைதலை ஊக்குவிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**வெளிநாட்டுத் துறை சாதகமான உத்வேகத்தைத் தொடர்ந்தும் பேணுகின்றது**

இறக்குமதிகளில் உயர்வான அதிகரிப்பொன்றின் மூலம் தூண்டப்பட்டு வணிகப்பொருள் வர்த்தகப் பற்றாக்குறையானது 2023இல் அடையப்பெற்றவையுடன் ஒப்பிடுகையில் 2024 சனவரியில் விரிவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும், பணிகள் வர்த்தகம் பிரதானமாக சுற்றுலாத் துறையிலிருந்தான வருவாய்கள் 2024 பெப்புருவரியில் முடிவடைகின்ற இரு மாதகாலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவு மீட்சியடைந்துள்ள அதேவேளை, தொழிலாளர் பணவனுப்பல்களில் சாதகமான உத்வேகம் தொடர்ந்தும் இடம்பெறுகின்றது. சீன மக்கள் வங்கியிடமிருந்து கிடைத்த பரஸ்பர பரிமாற்றல் ஒப்பந்த வசதியினை உள்ளடக்குகின்ற மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2024 பெப்புருவரி இறுதியளவில் ஐ.அ.டொலர் 4.5 பில்லியனாக அதிகரித்தது. வெளிப்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் அதிகரித்த வெளிநாட்டு நாணய

உட்பாய்ச்சல்களுக்கு மத்தியில் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்து மத்திய வங்கி மூலமான கணிசமான தேறிய கொள்வனவுகளால் ஒதுக்கினைக் கட்டியெழுப்புவதற்கு ஆதரவு கிடைத்தது. 2023இல் ஐ.அ.டொலருக்கெதிராக 12.1 சதவீதத்தினால் உயர்வடைந்த இலங்கை ரூபா தொடர்ந்தும், மத்திய வங்கி மூலமான குறிப்பிடத்தக்க வெளிநாட்டுச் செலாவணி கொள்வனவுகளுக்கு மத்தியில் 2024இல் இதுவரையிலும் 6.7 சதவீதம் கொண்ட உயர்வடைதலொன்றைக் காண்பித்தது. அதேவேளை, இலங்கையின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் இரண்டாவது மீளாய்வினதும் 2024 உறுப்புரை IV ஆலோசனையினதும் பின்னர் பன்னாட்டு நாணய நிதியத்துடன் பொருளாதார கொள்கைகள் மீதான அலுவலர் மட்ட இணக்கப்பாடொன்றை அதிகாரிகள் எட்டியுள்ளனர்.

**நடுத்தரகாலம் மீதான உறுதியான பணவீக்க எதிர்பார்க்கை மற்றும் குறைவடைந்த கேள்வி அழுத்தங்கள் என்பவற்றின் நோக்கில் கொள்கை வட்டி வீதங்கள் மேலும் குறைக்கப்பட்டுள்ளன**

மேலே எடுத்துக்காட்டப்பட்ட நடைமுறை மற்றும் எதிர்பார்க்கப்படும் பேரண்ட பொருளாதார அபிவிருத்திகளைப் பரிசீலனையில் கொண்டு, இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையானது, 2024 மாச்சு 25ஆம் நாளன்று இடம்பெற்ற அதன் கூட்டத்தில் மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தினையும் முறையே 8.50 சதவீதத்திற்கும் 9.50 சதவீதத்திற்கும் 50 அடிப்படைப் புள்ளிகளால் குறைப்பதற்குத் தீர்மானித்தது. வரவிருக்கும் மாதங்களில் பணவீக்கத்தில் அண்மைய மற்றும் எதிர்பார்க்கப்பட்ட மாற்றங்களுக்கான காரணங்கள் வழங்கலால் தூண்டப்பட்ட அத்துடன் நிர்வாக ரீதியாக நிர்ணயிக்கப்படும் விலைகளால் உந்தப்பட்டது என சபை அபிப்பிராயப்பட்ட அதேவேளை பணவீக்க எதிர்பார்க்கைகள் நன்கு நிலைநிறுத்தப்பட்டிருந்தமையை அவதானத்திற்கொண்டது. நாணயக் கொள்கையினை மேலும் தளர்த்துதல் என்பது சந்தை வட்டி வீதங்களுக்கு குறிப்பாக தனியார் துறைக்கான தொடர்ச்சியான கொடுகடனின் தொடர்ச்சியான விரிவடைதலுக்கு ஆக்கபூர்வமான மட்டங்களுக்கு மேலும் கீழ்நோக்கி சீர்செய்வதற்கும் இதனூடாக இடம்பெற்றுவரும் பொருளாதார நடவடிக்கை மீட்சிக்கு ஆதரவளிப்பதற்கும் கடன் வழங்கல் வீதங்களுக்கு தேவையான வசதியினை வழங்குமெனவும் சபை அபிப்பிராயப்பட்டது. இதற்கு மேலதிகமாக, 2023 ஓகத்தில் வழங்கப்பட்ட ரூபா பெயர்குறிக்கப்பட்ட கடன்வழங்கல் உற்பத்திகள் மீது உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் மீதான 2023ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நாணயவிதிச் சட்டக் கட்டளை, ஒட்டுமொத்த சந்தை வட்டி வீதங்களைக் குறைப்பதற்கு பங்களித்து இதன் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள் விளைந்தன எனவும் சபை அபிப்பிராயப்பட்டது. சொல்லப்பட்ட கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட வரையறைகள் அதன் நடைமுறைப்படுத்தல் காரணமாக மேலதிக நாணயக் கொள்கை தளர்வின் பின்னணியில் இனிமேலும் தொடர்புடையதாகவிருக்காது என்பதனை கருத்திற்கொண்டும், பொருளாதாரம் இயல்புநிலையினை அடைவதனால் சந்தை அடிப்படையிலமைந்த சாதனங்களை நோக்கி நிருவாக ரீதியான வழிமுறைகளிலிருந்து விலகியிருக்கும் நோக்குடனும் சபையானது உடனடியாக அமுலுக்குவரும் வகையில் 2023ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நாணயவிதிச் சட்டக் கட்டளையினை நீக்குவதற்குத் தீர்மானித்து. இறுதியாக, சபையானது திரவத்தன்மை நிலைமைகளில் மேம்பாடுகளுடன் ஒன்றிணைத்து உள்நாட்டு பணச் சந்தை நடவடிக்கையில் காணப்படுகின்ற மேம்பாடுகளை கவனத்தில்கொண்டதுடன் 2024 ஏப்பிறல் 01 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதியைப் பயன்படுத்தல் மீது தற்போது காணப்படுகின்ற கட்டுப்பாடுகளை அகற்றுவதற்குத் தீர்மானித்தது. நாணயக் கொள்கைச் சீராக்கங்களின் சந்தை அடிப்படையிலமைந்த ஊடுகடத்தலுக்கு இது மேலும் ஆதரவளிக்கும். தொடர்ச்சியான நாணயக் கொள்கை தளர்த்தல் வழிமுறைகளின் நன்மைகள் வியாபாரங்களுக்கும் குடும்ப அலகுகளுக்கும் போதுமானளவு ஊடுகடத்தப்படுகின்றன என்பதனை உறுதிசெய்வதற்கு சந்தை வட்டி

வீதங்களைக் குறைப்பதற்கு அனைத்து நிதியியல் நிறுவனங்களும் துரிதமான நடவடிக்கை எடுப்பதற்கான தேவையினை சபை வலியுறுத்தியது.

| | | |
|---|---|---|
| **நாணயக் கொள்கைத் தீர்மானம்** | **கொள்கை வட்டி வீதங்கள் குறைக்கப்பட்டுள்ளன மற்றும் நியதி ஒதுக்கு விகிதங்கள் மாற்றமடையவில்லை** | |
| | துணைநில் வைப்பு வசதி வீதம் | 8.50% |
| | துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் | 9.50% |
| | நியதி ஒதுக்கு விகிதம் | 2.00% |

**தகவல் குறிப்பு:**

ஆளுநர் முனைவர் பி. நந்தலால் வீரசிங்க அவர்களின் தலைமையிலான ஊடக மாநாடு இலங்கை மத்திய வங்கியின் கேட்போர்கூடத்தில் 2024 மாச்சு 26ஆம் திகதி மு.ப 9.00 மணிக்கு நடைபெறுவதுடன் முகநூல் மற்றும் யு ரியூப் என்பவற்றின் வாயிலாக நேரலையாக இடம்பெறும்.

நாணயக் கொள்கை மீதான அடுத்த கிரமமான அறிக்கை 2024 மே 28ஆம் நாளன்று வெளியிடப்படும்.

* **தரவு இணைப்பு** பெறுவழி: https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/mpr02_2024_e.pdf